உ
சிவமயம்

Registered as a News-
paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரண ஹூ ஐப்பசிமீ ௧0உ (1944 ஒக்டோபர்மீ 26 வியாழக்கிழமை) [இல ருரு

# புதியதாக்குதலில் பிருத்தானியர், ஹாலந்தில் நான்கு பட்டினங்களை மீட்டனர்

## நேசதேசத்தினர் பிறெஸ்கென்ஸிலிருந்து வெளியேறினர்

### ஹாலந்துக்குள் ஒருமைல் தூரம் கனேடியத்துருப்புகள் பிரவேசித்து விட்டனர்

தளகர்த்தர் டிம்ப்ஸியின் படைகள் ஹாலந்தைத்தாக்கவாரம்பித்த ஹேட்டோஜன் பொஸ்ச் என்னும் பட்டினத்தின் வாயிலையடைந்துள்ளனர். பிரித்தானியர் இதுவரை ஹாலந்தின் தென்கிழக்குப் பகுதியில் செய்த யுத்தத்தில் நான்கு பட்டினங்களை மீட்டுள்ளனர். ஷின்டல், ஒல்லன்ட், புறாகன், மிடில்ரேட் என்னும் நான்கு பட்டினங்களும் இன்னும் ஆறு கிராமங்களும் இன்று முற்றாக பிரிட்டிஷாரின் கைவசமேயிருக்கின்றது. ஹேட்டோஜன் பொஸ்ச்சை இன்னும் பாதுகாப்பது பகைவர்களுக்கு இயலாத காரியமெனத் தளகர்த்தர் டிம்ப்ஸியின் படையிலுள்ள ஒரு மேலுத்தியோகத்தர் கூறியுள்ளாராம்.

எஸ். எச். ஏ. ஈ. எப். அக் 24—பிறெஸ்கன்ஸிலிருந்து நேசதேசத்தினர் வெளியேறியுள்ளனர். ஷெல்ட் துறைமுகம் இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் கைப்பற்றப்பட்டது. அங்கு இப்பொழுது அவ்வளவு நிலைமை ஸ்திரமாயில்லையாயினும் யுத்தம் நடைபெறத்தான் செய்கின்றதாம். மறுப் பக்கத்தில் நிலைமை நன்றாகவிருக்கின்றது. லியோபோலட் கால்வாய் வழியாகச் சென்ற சைநியங்கள் பெல்ஜியத்தின் தென்கிழக்குப் பக்கமாக டுரும்பர்க்கைச் சமீபித்துள்ளது.

### நோர்வே எல்லையில் ருஷ்யப் படைகள்

சோவியத் படைகள் நார்வே எல்லைப் புறத்தையடைந்துவிட்டனவென்று ஒரு சோவியத் அறிக்கை கூறுகிறது. கம்லிபன போர் முனையிலுள்ள படைகள் பெட்ஸாமோ பகுதியில் நடத்திய சண்டையில் ருஷ்ய-நார்வே எல்லையை அடைந்துவிட்டன. சோவியத் சைநியங்கள் நிக்கல் சுரங்கங்களைக் கைப்பற்றியதோடு அநேக கிராமங்களையும் தம்வசப்படுத்தின. வடக்கு ருமேனியாவிலுள்ள படைகள் ருமேனியப்படைகளின் ஒத்துழைப்புடன் அநேக இடங்களைப் பிடித்துள்ளன. இரண்டாவது உக்கிரேனிய ஆமிக்கச் சைநியங்கள் இன்று டாங்கிப் படைகளைக்கொண்டும், காலாட்படைகளைக்கொண்டும் தீவிரமாகச் செய்த சண்டையில் ஹங்கேரிய பிரதேசத்திலுள்ள சத்ரு பாதுகாப்பு அரணான முக்கிய ஸ்தானமும் பெரிய போக்குவரத்து ஸ்தலமுமான கிரிஸ்நகரைக் கைப்பற்றின. மற்றும் இரு நகர்கள் மூன்று புகைரத ஸ்டேஷன்கள் உட்பட பல கிராமங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

## அட்மிறல் ஹோர்த்தி

ஹங்கேரியின் ரீஜண்டான அட்மிறல் ஹோர்த்தி விசேஷ விமானத்தில் ஜெர்மனிக்குச் சென்றிருக்கிறார் என்று ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கின்றதாம். தாமாகவேதான் அவர் ஜெர்மனிக்குச்சென்றிருப்பதாக மேற்படி செய்தி கூறியுள்ளதாம்.

## படைகளின் சீமெந்து களவு போயிற்றாம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரகசியப் பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கே. டி. நாபன யாழ்ப்பாணக் கடற்படை எஞ்சினீயர்கள் பகுதியின் பண்டகசாலையதிபரான ஜே. எஸ். முத்தையா என்பவரையும் 'செக்கர்' கே. அப்பையா என்பவரையும் நீதிபதி மிஸ்டர். அல்லஸ் முன்னிலையில் அவரது பங்களாவில் கொண்டுபோய் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கோரினர். அவரது கோரிக்கையை நீதிபதி அனுமதித்தார். முதலாள் படைக்குச் சொந்தமான சீமெந்து முட்டைகள் களவாடப்பட்டதையொட்டியே குறித்த இருவரையும் இன்ஸ்பெக்டர் நாபன கைது செய்தாராம்.

களவுபோன சீமெந்து மூடைகள் நல்லூரைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்ற ஒருவரது வீட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சைநியங்களின் சாமான்களின் சோரச்சந்தை இந்த வெகுமும்முரமாக நடப்பதாயும் இதைக்கண்டுபிடித்துச் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டனைக்குட்படுத்தப் பொலிஸ் அதிகாரிகளும் சைநிய அதிகாரிகளும் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பதாயும் அறியப்படுகின்றது.

## ஹிம்லரைக் கொல்ல முயற்சி

"டெயிலி மெயில்" விசேஷ நிருபர் எழுதுவதாவது:—

ஹிட்லரின் உள்நாட்டுச் சைநியத்தின் பிரதம சேனாதிபதி ஹிம்லரைக்கொல்ல புடாபெஸ்டில் முயற்சி செய்யப்பட்டதென்றும் அவர் இப்பொழுது ஒப்பேவடித்துக்கொண்டிருக்கிறாரென்றும் ஹிம்லர் கொல்லப்பட்டுவிட்டதாக முன்பு வந்த செய்திகள் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. அவருக்குக் காயமேற்பட்டதென்று இப்பொழுது தெரிவிக்கப்படுகிறது. ஜெர்மன் அதிகாரிகள் இதுபற்றி ஒன்றும் கூற மறுக்கின்றனர்.

## ஆங்கிலோ-ருஷ்ய ஒற்றுமை

முன்பு நடந்த மாஸ்கோ, க்யூபெக், டெஹ்றான் மகாநாடுகளைவிடச் சமீப மாஸ்கோப் பேச்சுக்களில் சமரசமும், ஒற்றுமையும் மேலோங்கி நிற்கின்றது, போலிஷ் பிரச்னையிலும் பால்கன் கொள்கையிலும் ஏகமனதான ஒற்றுமை சர்ச்சிலுக்கும் ஸ்டாலினுக்கும் இருந்தது என்று தெரியவருகிறது. போலிஷ் பிரதம மந்திரி மிக்கொலெஷிக் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடுகிறதும். அவர் மகாநாட்டின் தீர்மானங்களுக்கு லண்டன் போலிஷ் நண்பர்களின் பூரண சம்மதத்தைச் சுலபமாகப் பெறுவார் என்று நேசதேச வட்டாரங்கள் நம்புகின்றன, எதிர்பாராத திட்டங்கள் ஏற்பட்டாலன்றிப் போலிஷ் பிரச்னை தீர்ந்து சோவியத்-பிரிட்டிஷ் நட்பில் கடைசித் தடையும் நீங்கும்.

போலிஷ் பிரச்னை மட்டுமின்றித் தென்கிழக்கு ஐரோப்பிய யுத்தத்தைப்பற்றிய வெகுமுக்கியமான முடிவுகளை மகாநாடு செய்துள்ளதாம்.

## ஆஸ்திரேலியாவுக்கு ஸேர், ஒலிவர் குணதிலக புத்திமதி

இலங்கையின் உணவுக் கமிஷனரும், பொதுஜன பாதுகாப்புக் கமிஷனருமான ஸேர், ஒலிவர் குணதிலக ஆஸ்திரேலியாவில் பின்வருமாறு கூறியுள்ளாராம்:—

"தனது தொழில்களையும் உற்பத்திகளையும் இப்போதிருப்பது போலவே வைத்துக்கொள்ள ஆஸ்திரேலியா விரும்பினால் இலங்கையைப்போன்ற ஒரு சிறிய தீவில் வசிக்கும் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைத்தரத்தை அபிவிருத்திசெய்யும் சுமையில் தானும் ஒரு பங்கைச் சுமக்கவேண்டும். நாம் ஆஸ்திரேலியாவின் விசேஷ பாதுகாப்பில் இருக்கிறோம் அன்றி ஜப்பானின் பாதுகாப்பிலல்ல".

## பிரிட்டனின் வெளிநாட்டு வர்த்தகம்

1938 முதல் பிரிட்டனின் ஏற்றுமதி வியாபாரம் யுத்தத்திற்குமுன்பு இருந்ததைவிட விலையில் பாதிக்குக் குறைந்துவிட்டது. நிகரதேசிய வரும்படியில 1938-ம் வருடம் பிரிட்டிஷ் ஏற்றுமதி 10.4 சத விகிதமாக இருந்தது. ஆனால் சென்ற வருடம் 2.8 சத விகிதம்தான்.

இந்தப் புள்ளி விபரங்கள் வர்த்தக போர்ட்டால் வெளியிடப்பட்ட வெள்ளைக் காகிதத்தில் தரப்பட்டிருக்கின்றன. பலதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைவிபரம் 1938, 1943 வருஷங்களுக்குத் தரப்படுகிறது.

சுயாதீன அயர்லந்து
20282 ஆயிரம்பவுண்
115597 " "
அவுஸ்திரேலியா
3[illegible] " "
[illegible] " "

கனேடா
22530 " "
23150 " "
பிரிட்டிஷ் இந்தியா
33165 ஆயிரம் பவுண்
17549 " "

இந்தவருடம் ஏற்றுமதி வியாபாரம் இன்னும் குறைந்து வருகின்றது.

புள்ளி விபரம் கிடைக்கவில்லை. பிரிட்டன் தன் குடிஜனங்களுடைய வாழ்க்கைத் தரத்தைக் குறைக்காமலிருக்கவேண்டுமானால் உழைப்பு சக்தியும், சாதனங்களும், யுத்தத்தினின்று விடுபட்டவுடனே பிரிட்டனின் ஏற்றுமதி வியாபாரத்தைப் பெருக்கப் பெருமுயற்சி செய்யவேண்டும்,' என்று வெள்ளைக் காகிதம் கூறுகிறது.

## இந்தியாபற்றி எங்களுக்கு ஒன்றுந் தெரியாது

ஆசிரியர் எட்வட் தொம்ஸன் பக்கிங்ஹாம்ஷியரிலிருந்து அக்டோபர் 6ம் தேதியிட்டு ஸ்ரீ ஸி, ராஜகோபாலாச்சாரியாருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

"என் தவறுகளைத் திருத்துவதாம் உங்கள் விமானத்தபாற் கடிதம் எனக்கு இப்பொழுது கிடைத்துள்ளது. நான் அதை ஸ்பெக்டேட்டரில் பிரசுரிக்கலாமா? இதற்கு நான் ஏற்பாடு செய்ய முயலுகிறேன். எங்களுக்கு இந்தியாவிலிருந்து அவ்விதச் சுருக்கமான செய்திகளே கிடைக்கின்றன. ஒப்புதத்திற்கு வருவதான உங்கள் பூரணத்திட்டத்தையும் எங்கும் நான் பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை; நேர்மையான திட்டம் தயாரிப்பதற்கு நீங்கள் முயல்வதை இகழ்த்தக்க குறும்பென நான் உறுதியாக நினைக்கவில்லை. காந்திஜி—ஜின்னாவுடன் சமாசத்திற்கு வர முயற்சிப்பதையும் நான் அவ்விதம் கருதவில்லை.

என் கடிதத்தை நீங்கள் மீண்டும் கவனிப்பின் பொதுஜன வாக்கெடுக்காத அல்லது, அடங்கிய பிரஜைகளைக் கலந்துகொள்ளாத இரண்டு பாகிஸ்தான் ஜின்னாவிற்குத் தர காந்திஜி பிடிவாதமாய் மறுத்திருக்கிறாரென்று இந்த நமப்படும் விஷயத்தை நான் மறுப்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம்;

எங்களில் சிலருக்கு இந்தியாவைப்பற்றி யொன்றுந் தெரியாது இப்பொழுதோ நாங்கள் அறிந்துள்ள விஷயம், எப்பொழுதும் தெரிந்திருப்பதிலும் குறைவானதாகும். இந்தியாவின் சுதந்திரத்திற்காக முயன்றுவரும் அநேகர், காந்திஜியை மகாத்மாவெனவோ அல்லது உலகில மிகப்பெரிய சமாதானவாதியெனவோ கொண்டிருப்பதாலேயே அவ்விதஞ் செய்து வருகின்றனர். உங்கள் கடிதத்தால் இங்கு நன்மையே விளையும். நீங்கள் கூறும் எந்த வகையிலும் உதவியளிக்க நான் முயலுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஞு
ஐப்பசிமீ ௧0௨ வியாழக்கிழமை

## தாரகையொளி மழுங்குகின்றதா?

• இந்த யாழ்ப்பாணத்திலே மிகவுந் தொன்மையோடு கூடியதாகிய "உதய தாரகை" சில காலமாகத் தன்னிலைமை மாறிச் சாதிச்சண்டை சமயப் பிணக்குகளை மூட்டிவிடுதற்குத் தலைப்பட்டுக் கொண்டு நிற்கிறதே யென்பதையிட்டுக் கவலைப்படவேண்டியிருக்கிறது; இப்பத்திரிகை அமெரிக்க மிஷனரிமாராலும் அவர்களைச் சேர்ந்தோராலும் அபிமானித்து நடத்தப்படுவது; ஏனைய கொள்கை யுடையவர்களைக் கண்டித்தல் முன்னர் அரிதாகவிருந்தது; இதனால் கிறீஸ்துவர் மாத்திரமன்றிச் சைவ மக்களுள்ளும் சிலர் இதனை அபிமானித்து ஏற்று வாசித்து வந்தமையை அறிவோம். ஆனால் இப்பொழுது சில காலமாக இத்தாரகையானது, இங்குள்ள சைவமதத்தினர் கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் கண்டிக்கவும், மகாத்மா காந்தி முதலிய பெரியார்களை யாரும் பாராட்டிக் கூட்டங் கூடி காந்திஜயந்தி முதலிய கொண்டாட்டங்கள் கொண்டாடுதலைக் குறைகூறவும், குத்திரங்கூறவுந்தலைப்பட்டுத் தனக்குள்ள ஒளியும் மழுங்கப் பெறுமோவெனச் சந்தேகப்படத்தக்கநிலையில்வந்துவிட்டது. எந்தச்சமயத்தவரும் எந்தச் சாதியினரும் தத்தம்சமயக்கொள்கைகளைப் பற்றையும் சாதிக்குரிய பழக்கவழக்கங்களையும் எடுத்துக்கூறலாம், போதிக்கலாம்; அவற்றால் மற்றையசமயத்தவர்களுக்குஞ் சாதியார்க்கும் வரும் இழுக்கும் குறையும் இல்லையாகும்.

இப்பத்திரிகை அங்ஙனஞ் செய்வதை அலட்சியஞ் செய்துவிட்டு, இங்குப் பெரும்பான்மையினராயுள்ள சைவ மக்களுக்கிடையே ஒரு சார் ஏதும் சமயப்பிணக்கு, சாதிப்பிணக்கு நேர்ந்தால், இத்தாரகை அதனை யறிந்த மாத்திரத்தே தனக்கு அநுகூலமான ஒரு பக்கத்தையே சார்ந்து கொண்டு அவர்கள் பொருட்டுப் பெருத்த ஞாயம் பேசத் தொடங்கிக்கொண்டது. இற்றைக்குச் சிலவாரங்கட்கு முன்னரும் தாரகை இப்படியான கருமத்திலே தலையிட்டபோது, அதன் பொருந்தாக் கூற்றை யெடுத்துக்காட்டியுள்ளேம்.

இந்த அக்டோபர்மாசம் 13உ வெளிவந்த உதயதாரகையில் "அஹிம்சா தர்மமும் வில்லூன்றிச்சம்பவமும்" என்ற மகுடாசனத்துடன் பத்திராசிரியர் கூற்றாக ஒரு வியாசம் வெளிவந்துள்ளது. அந்த வியாசத்தின்கண் விஷயத் தொடர்பு தர்க்கரீதியென்று சொல்லப்படும் பத்திராசிரியர் வியாசத்திறமாகிய பரம்பரையையேனும் இயைபினையுங் காணேம். அதன்கணுள்ள முதல் வாக்கியம் அஹிம்சா தருமத்தின் இலக்கணமாகும்; அடுத்த வசனம் "ஜைனமதம், புத்த சமயம், இந்துசமயமென்னும் சமயங்கள் அஹிம்சாதர்மத்தைக் கைக்கொண்டு நடக்க வேண்டுமெனப் போதிக்கின்றன" என்பதாம். ஆனால் இந்த மூன்று மதங்களுடன் கிறீஸ்து மதமும் அஹிம்சா தருமத்தைக் கைக்கொண்டு நடக்க வேண்டுமென்னும் கட்டுப்பாடுடைய தென்று பத்திராசிரியர் தமவியாசத்தில் எவ்விடத்திலும் எடுத்துக்காட்டக் காணேம். இதன் நோக்கம் யாதெனவும் புலப்படவில்லை. கிறீஸ்து சமயத்தில் அஹிம்சா தருமஞ் சொல்லப்படவில்லையா? இல்லையேல் சொல்லியிருந்தால் அந்தச் சமயத்தைப் போதிக்கும் இவர் அறிந்திலரா? ஏனைய சமயங்களில் அஹிம்சா தருமம் எவ்வளவுக்கு அதனது பாராட்டப்படுகின்றதோ அவ்வளவுக்குக் கிறீஸ்துசமயமும் அதனைப் பாராட்டுகின்றதென்பதை உண்மையான கிறீஸ்தவர்யாரும் மறுப்பார்களா?

சரி, முந்திய மூன்று சமயங்களிலும் அஹிம்சா தருமம் போதிக்கப்படுகின்றது நிசமென்னும் அதற்கும், மகாத்மா காந்தியின் ஜனனதினக் கொண்டாட்டத்திற்கும், வில்லூன்றிச் சம்பவத்திற்குமிடையேயுள்ள தொடர்பென்னையோ? சமயங்களெல்லாம் அஹிம்சா தருமத்தைப் போதிக்கின்றன. சிலர் தம் சமய போதனையைப் பின்பற்றி இயன்றளவில் நடக்கிறார்கள். பலர் நடவாதொழிகின்றனர்; அதனால் அச்சமயங்களும் அஹிம்சா தருமக் கொள்கைகளும் பொய்யாக, அதனைக் கைக்கொள்ளுவோரும், கொண்டோரைப் போற்றுவோரும் ஹிம்சையாகிய அதர்மத்தைச் செய்பவர்களென்பது பெறப்படுமா? தாரகையாசிரியரின் கூற்று பிட்டத்தி லடிக்கப் பல்லுதிர்ந்தது என்னும் போன்ற அசம்பாவிதமாகவன்றோ காணப்படுகின்றது. இப்பொழுது நடக்கும் மகாயுத்தம் அஹிம்சா தருமத்துட்பட்டதா? ஹிம்சாஅதருமத்துட்பட்டதா? இதனால் யுத்தத்திற சம்பந்தப்பட்டார் சமயம் இழுக்குடையதென்பது பெறப்படுமா?

இனி, வில்லூன்றியில் நிகழ்ந்த அனர்த்தம் சாதிப் பிணக்குக் காரணமாக எழுந்ததென்பது நிசம். அந்தவிஷயம் இப்பொழுது நீதி மன்றத்தில் விசாரணையிலிருப்பதினால் எவர் சரி எவர் பிழை, யார் அபராதிகள் யார் நிரபராதிகளென்பதைப்பற்றி இப்பொழுது எழுதுவது மரபன்றென்ற காரணம் பற்றியே யாம் மௌனஞ் சாதித்துள்ளேம். இங்ஙனமாக உதயதாரகைப் பத்திராசிரியர் தாழ்ந்த சாதியார் பக்கத்தில் நியாயவாதிபோல் ஏற்பட்டுத் தம் பத்திரிகை வாயிலாக வெற்றுரை வரையும் நோக்கமென்ன? சாதிபேதம் சைவசமயத்தில்மாத்திரந்தானா, யாழ்ப்பாணத்தில் வில்லூன்றி மயானத்தில் மாத்திரந்தான் இருக்கிறதா? நிறபேதக் கட்டுப்பாடு சாதிபேதக் கட்டுப்பாடு பலவேறு விதமான முறையில் அமெரிக்கா, தென்னாபிரிக்கா, ஐரோப்பா முதலிய எல்லா இடங்களிலும் உண்டு தானே; ஆயிரக்கணக்கான வருடங்களாக நிலைபெற்று வந்த இந்தக் கட்டுப்பாடுகள் உடனுக்குடன் அறவே அகன்று விடுமென்று அறிஞரெவரும் எதிர்பாரார். அல்லாமலும் இவ்வகையான கட்டுப்பாடுகளை மிருக வலியினாலும் அதிகாரத்தினாலும் சிதைத்தல் அரிதாகும்; இவைகளை அறிவினாலும் தண்ணளியாலும் இதோபதேசங்களினாலும் சாத்துவிக முறையைக் கைக்கொண்டு காலகதியில் ஒழித்தல் முடியும் வெள்ளிடைமலையென்று வேங்கை யழகவாறு இந்தத் தாரகைப் பத்திராசிரியர் இச் சமயத்திலே இப்படியான விவாதங்களை எழுதத் தலைப்பட்ட நோக்கம் இங்குள்ளார் பலரறிந்த இரகசியமாகும். இவர் ஆக்கவிருக்கும்பிணக்கினால் வரக்கூடிய தீமை சாதிக் கட்டுப்பாட்டினால் வரக்கூடிய தீமைகளைக் காட்டிலும் அதிகப்படுமென்றஞ்சுகின்றேம்.

## வடமாகாணப் போக்குவரத்து வசதிகள்

மன்னார் வவனியாப் பகுதிகளிலுள்ள பாதைகளை அபிவிருத்தி செய்வதற்கும், யாழ்ப்பாணத்தையும் பூனகரியையும் இணைக்கும் புதிய பாலத்தை அமைப்பதற்கும் மொத்தம் 10 லட்சம் ரூபாய் செலவாகுமென அறிவிப்படுகின்றது.

பூனகரியிலிருந்து கரையோரமாகப் போகும் றோட்டை மன்னார் வரை அமைப்பதற்கும் மன்னாரிலிருந்து அந்த றோட்டை வங்காலை மார்க்கமாக அரிப்புக்கும், அதிலிருந்து மறிச்சுக் கட்டிக்கும் விஸ்தரிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்திசெய்யக்கூடிய நிலங்களை விளைவு செய்வதற்கும் உணவு உற்பத்திக்கு உதவியான புதிய நிலங்களைப் பண்படுத்துவதற்கும் பாதை அபிவிருத்தித் திட்டம் அத்தியாவசிய மானதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்திற்கான பணம் கடன் திட்டமூலம் ஒதுக்கப்படுமென்று தெரிகிறது.

## கமத்தொழிலாளர்மகாநாடு

29-10-44 மாலை 6 மணியளவில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஸ்ரீமான் C. குமாரசுவாமி அவர்கள் தலைமையில் ... பகிரங்கக் ... அறிவிப்படுகின்றது. ... சுடுக.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—23)

### "கொடிக்குக் காய் பாரமல்ல"

"நான் அந்த இடத்தைவிட்டு அறையட்போய்ப் படுத்துக்கிடக்கவும், மாமி மேலும் மேலும் உரக்க சத்தத்தோடு அதிகம் பேசினாள்; அப்பேச்சையெல்லாங் கேட்க என்னால் மனஞ்சகிக்க முடியவில்லை; நான் பிறகும் படுக்கைவிட்டு எழுந்துபோய், மாமி! ஏன் அநியாயமாக இப்படிப் பேசுகிறீர்கள்? எலும்பில்லா நாவால் எதனையும் பேசிவிடலாமென் றெண்ணுகிறீர்களா? நான் உங்களுக்கு ஏதும் பிழை செய்தால் நீங்கள் எனக்கு இரண்டு அடியடிக்கலாம்; நீங்களும் ஒரு பெண் குழந்தையை வைத்துக்கொண்டு இப்படி என்னை அநியாயமாகப் பேசலாமா? வேலி பயிரைமேயத் தலைப்பட்ட விதமாக, நீங்களே இப்படி என்னைத் தூற்றத் தலைப்பட்டால் அயலட்டத்திலுள்ளவர்கள் என்ன தான் பேசார்கள்; என்னைததான் வைது என் மனத்தைப் புண்ணாக்குகின்றீர்கள் காரியமில்லை, உங்கள் கணவனையும் கவலைப்படுத்துகிறீர்களே; நானசிறுபெண், அறிந்தோ அறியாமலோ ஏதும் பிழைசெய்திருந்தால் அதனைத் தெய்வத்துக்காகப் பொறுத்துக்கொள்ளுங்கள்; உங்கள் பிள்ளை வேறு நான் வேறென்று எண்ணவேண்டாம்" என்று இரந்து கும்பிட்டுச் சொன்னேன். நான் இப்படி இரந்துவேண்ட, அவள் நாகம்போற் சீறி "ஆமடி உன்னை நான அறிவேன்; நீ ஆசாரக்காரியல்ல; நீயோ சிறுபெண்; நீ உருத்திராட்சப்பூனையடீ; உனக்கு உலக அநுபவம் முழுவதுந் தெரியுமடி? இப்பொழுது உன் மாமனுருக்கு உன்னைப்பற்றிய இரகசியங்களை வெளிப்படுத்துவேன் என்று பயந்துதான் நீ இப்படிச் சாலம் பண்ணுகிறாய்; உன் மானக்கேடான நடையை இன்னமும் நான் எடுத்து வெளியிட்டால் உன் மாமனார் இந்தக் கணமே உன்னை இந்த வீட்டிலிருந்து துரத்திவிடுவார்; பாவம்! நடக்கேன அந்தப் பழியென்று யோசிக்கிறேன்..."

என்று அவள் சொல்லுவதற்கிடையில், ஐயா, என்னை மறந்து எனக்கு ஆத்திரம் அதிகப்பட்டது; என் சரீரம் நடுங்கியது; மனம் பதறியது; நாத்தடுமாறியது; மாமனாரைத் தருமசங்கடப்படுத்தாமல் அவர் தலையுணர்ந்தபடி தீரக்கவலையோடிருப்பதைக் கண்டேன்; மாமா, இப்படியெல்லாம் அந்த மனுஷி யென்னைப் பேச நீங்களும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா? உங்களை நம்பியல்லவா என் பெற்றோர் என்னைக் கொண்டுவந்து இந்த வீட்டில் விட்டார்கள்! உங்களைத் தஞ்சமென்று நம்பியல்லவா நான் இங்கே இருக்கிறேன்; நீங்கள் எனக்கு உங்கள் பெண்பாட்டிலைக் கண்டு ... வேண்டாம்; ... வேண்டாம்; நான் குடித்தனத்தைக் குலைப்பவளல்ல; எனக்கு இந்த ஒரு உதவியையுஞ் செய்யுங்கள்; என்னை என் பெற்றோர் வீட்டில் கூட்டிக்கொண்டுபோய் விடுங்கள்; கொடிக்குக் காய் பாரமல்ல; அவர்கள் என்னைப் பாதுகாப்பார்கள்; நான் இனி இந்த வீட்டிலே இருக்கமாட்டேன்...."

என்று சொல்லுவதற்கிடையில், என் மாமி "நீ யொருவருமறியாமல் போக வேண்டாம்; உன் அம்மானும் நீயும் ... இருக்கும் ... உன் பிள்ளையையுங் கொண்டு நான் போகிறேன்" என்று உள்ளஞ்சுடச் சொன்னாள். அவள் சொன்ன வஞ்சகமான வார்த்தை என் மாமனார்க்கு அதிக கோபத்தை மூட்டிவிட அவர் "அடீ, சீதா, வீண்பேச்சுப் பேசாதே; இன்னும் ஏதும் அடாத வார்த்தை பேசினால் பெரும் அவமானப்படுவாய்; உன் குணத்தை யறியாமல் நான் உன்னை வீட்டில் வைத்தேன்; நீ மிகவும் பொல்லாதவள்; நீ இந்த வீட்டில் வந்து சேருவதற்குப் பட்டபாடு எனக்குத் தெரியும்; சோறுண்கிடந்த அகப்பையுஞ் சோறவள வந்துவிட்டதாம் என்றவிதமாக நீ உன்னுடைய பழைய நிலைமையை அறவே மறந்து இப்போது எல்லாரையும் அடக்கியாளப் பார்க்கின்றாய்; நிரபராதியாகிய என் மருமகளைத் தூற்றத்தலைப்பட்டாய்; எங்கள் குடிக்குவழக்கில்லாத வார்த்தைகளையெல்லாம் பேசத் தலைப்பட்டுக்கொண்டாய்; இருக்குஞ்சாய் இருக்க விருப்பமானால் இரு; இல்லையேல் வீட்டைவிட்டு வெளியே போ" என்று கடிந்து சொன்னார். சின்னமாமி ஆவேசங்கொண்டாளாய், "நீரும் அப்படிச் சொல்லிவிட்டீரா? சரி, உம்முடைய பிள்ளையை ஏற்றுக்கொள்ளும்; என் வழிமெரிய நீங்களிரண்டுபேரும் நலமாயிருக்கப்போகிறீர்களா? இந்த நிமிஷமே நான் போய்விடுகிறேன்; எனக்கு ஒரு பாண்கின்னறும் பஞ்சமென்று நினைக்கிறீர்" என்று சொல்லிவிட்டு வேகமாக அந்த நடுச்சாமத்தில் வீட்டைவிட்டுப் புறப்பட்டாள். மாமனார் இவைகளையெல்லாம் கண்டும் யாதும் பேசாமற் சிந்தனையில் மூழ்கியவராயிருந்தார்.

### "நின்றாலும் நிஷ்டூரம் போனாலும் பொல்லாப்பு"

என்னாலல்லவோ இந்த அனர்த்தங்களெல்லாம் நேர்ந்தனவென்று என்னையே நான் நொந்துகொண்டு வேகமாகப் போகும் மாமி, வெளியே செல்வதற்கிடையில் நான் முந்தி யோடிப்போய் அவளைத் தடுத்து, "மாமி! நான் செய்த வெல்லாங் குற்றம், பொறுத்துக்கொள்ளுங்கள்; நாளை விடிவதற்கிடையில் நான் என் தாய் தகப்பன் வீட்டிற்குப் போய்விடுவேன்; நீங்கள் போகவேண்டாம் உள்ளே வாருங்கள்" என்று சொல்லிக் கையிறப்பிடித்து இழுத்துக்கொண்டுவர, அவள் யாதும் பேசாமல் மீண்டுவர, அந்த நேரத்தில் உறங்கிக்கிடந்த பிள்ளையும் இந்த ஆரவாரத்தினால் விழித்துக் கத்தியது; அவள் போய்த் தன் பிள்ளையின் பக்கலிற் படுத்துவிட்டாள்; மாமனாரும் தம் படுக்கையறையுட் போய்ப் படுத்துவிட்டார்; நானும் என்னுடைய படுக்கையிற் போய்ப் படுத்துக்கொண்டேன்; அன்றிரவு எங்கள் வீட்டில் எவரும் பேசவில்லை. நான் படுக்கையிற் கிடந்தபடியே பலவாறு யோசித்தேன்; மானங்கெட நேர்ந்தால் உன்னுயிரை விட்டுவிடு என்று என் அன்பர் அந்தியகாலத்திற் சொன்ன வாக்கு அந்த நேரத்தில் என் ஞாபகத்திற்பட்டது. சீதாலட்சுமி என்னையும் மாமனாரையுஞ் சேர்த்துச் சொன்ன பழிமொழி என்னுள்ளத்தைப் பொசுக்கியது; ஐயா, "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு" என்று அந்தப் பெரியார் உரைத்த திருவாக்கை யெண்ணினேன்; மானமழிந்தபின் வாழாமை முன்னினி

தொடர்ச்சி ௬-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியாரின் கவிப்பண்பு

வீ. கே. பி. என்.

(முற்றொடர்)

## கவியும் விஞ்ஞானமும்

பாரதியார் ஆங்கிலப்பயிற்சியுள்ளவராதலின் தற்காலத்து சாஸ்திர உண்மைகள் பலவற்றைத் தம்நூல்களில் புகுத்தியிருக்கிறார்.

"உள்ளந்தான் கவ்வவொரு சிறிதும் கூடாத
கொள்ளைப்பெரிய வுருக்கொண்ட பலகோடி
வட்ட வுருளைகள்போல் வானத்திலண்டங்கள்
எட்ட நிரப்பியவை யெப்போதும் ஓட்டுகின்றாய்
எல்லா மசைவில் இருப்பதற்கே சக்திகளைப்
பொல்லாப் பிரமமாய் புகுத்துவிட்டாய்"

என்ற அடிகளில் பல பூதபௌதிக சாஸ்திரங்களின் உண்மைகள் காணப்படுகின்றன.

"குன்றமொன்று குழைவுற்றிளகிக்
குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்
கன்று பூதலத் துள்ளுறை வெம்மை
காய்ந்தெழுந்து வெளிப்படல் போல"

என்று துரியோதனன் கோபத்தைக் கூறுவது உவமாலக்ஷணம் பொருந்தி யிருப்பதோடு, எரிமலையின் தன்மையையும் உணர்த்துகிறது. ஒளியின் வேகமான கதியை,

'காதமாயிர மோர்களத் துள்ளே
கடுகி யோடும் கதிரினம் பாடி'

என்று பாடியிருக்கிறார்.

விஞ்ஞானத்துறையிலே பெண்களும் ஈடுபடவேண்டும்; அவ்வாறு ஈடுபடுவதற்கும் அவர்கள் ஆவலோடிருக்கிறார்கள் என்பதை

"உலக வாழ்க்கையி னுட்பங்கள் தேரவும்
ஓதுபற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுதலார்தங்கள் பாரத
தேச மோங்க உழைத்திட வேண்டுமாம்"

என வெளியிடுகிறார் தம் "புதுமைப்பெண்"ணில்.

பலவிதமாகவும் மக்களைத் தூண்டி ஊக்குவித்த பாரதியார்தானும் கச்சைகட்டிக்கொண்டு, "உங்களை ஏவிவிட்டு, நான்மட்டும் பின்நிற்கமாட்டேன், நானும் கூடவே உங்களோடு உழைக்கிறேன் விஞ்ஞானவுயர்ச்சிக்காக" என்பதுபோல,

"காசி நகர்ப்புலவர்
பேசு முரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர்
கருவிசெய்வோம்"

எனத் தமது "பாரததேசம்" என்னும் கவிதையில் சங்கநாதஞ் செய்கின்றார்.

## மொழிபெயர்ப்புகள்

டெனிஸன் பிரபு என்னும் ஆங்கிலக்கவிஞர் எழுதியுள்ள "இன்மெமோரியம்" (Inmemorium) என்னும் பாடலை பாரதியார் மூலத்திலே வாசித்தார். மூலத்தில் உள்ள சோகம் எப்படியோ பாரதியாருக்கு ஆங்காரத்தையும் உண்டுபண்ணிவிட்டது. ஆங்காரபாவம் தமிழ்ச்செய்யுளாக உருவம் எடுத்தது. மக்கள் கோழைகளாய் இருக்கிறார்கள்; உடல், உணர்வு எல்லாம் சோர்ந்து போயிருக்கிறது' என்பது சாதாரண உணர்ச்சிதான். டெனிஸனுக்குப் புலப்பட்டது நமக்கும் புலப்பட்டதுதான். ஆனால் தனியான பாவத்தோடு பாரதியாரின் மனக்கண்முன் நிற்கிறது. நாட்டின் கீழான தன்மையெல்லாம் ஒழியவேண்டுமென்கிறார் பாரதி

"வலிமை யற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
பொலிவிலா முகத்தினாய் போ போ போ
பொறியிழந்த விழியினாய் போ போ போ"

வேண்டாதவன் வீட்டுக்குள் எப்படியோ வந்து உட்கார்ந்திருக்கப் பார்த்து அவனை வெளியே போ, போய்விடு என்று பிடரியைப் பிடித்துத் தள்ளித் தெருவுக்கே தாத்தினமாதிரி இருக்கிறது. "போ, போ போ" என்று தாளத்தில் வார்த்தையை வைத்தவுடன் அந்தக் காட்சி நம் கண்ணுக்கு வந்துவிடுகிறது.

"ஒலியிழந்த குரலினாய் போ போ போ
ஒழியிழந்த மேனியாய் போ
கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மையென்றும் வேண்டுவாய் போ போ போ"

அடிமைப் பதவி வேண்டுமென்றே சதா தூங்கியிருக்கும் ஜன்மமே கண்முன்னில்லாதே, போய்த்தொலை என்னு கோபபாவம் பொங்குகிறது.

சரியான அடிமைஅடா நீ! உன் தாய்ப்பாஷை உனக்குத் தெரியுமா? தெரியாது; வேறொரு பாஷைக்குமே நீ அடிமையென்பது தெரிய வேண்டாமா! என்று கதறுகிறார் கவி

"வேறுவேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ
நூறுநூல்கள் போற்றுவாய் மெய்கூறும்
நூலினொத் தியல்கிலாய் போ போ போ"

நீ படிக்கிற புஸ்தகம் எல்லாம் பொய்மயம். அவைகளுக்கு வழிபாடெல்லாம் செய்வாய். உண்மையைச் சொல்லும் நூல்களையோ புறக்கணிப்பாய். ஏதோ வாசிக்க நேர்ந்துவிட்டால் அதெல்லாம் அனுஷ்டானத்துக்கு அல்ல, என்று சொல்லி நழுவப்பார்ப்பாய். வேண்டாத வியாக்யானம்செய்து உண்மையைப் பொய்யென்று சாதிக்கப்பார்ப்பாய். இப்படியெல்லாம் பேசிப் பெரிய கலைகளையும் வாழ்க்கையையும் குட்டிச்சுவர் ஆக்கவிட்டுப் பிறர் இகழ்ச்சிக்குத்தானே உன் வாழ்க்கை இலக்ஷியமாய்ப்போய்விட்டது! என்று தலையிலே அடித்துக்கொள்ளுகிற பாவம்.

"மாறுபட்ட வாதமே ஐந்நூறு
வாயில்நீள ஓதுவாய் போ போ போ
சேறுபட்ட நாற்றமும் தூறுமேசேர்
சிறியவீடு கட்டுவாய் போ போ போ"

ஆங்கார தேவதையின் தாண்டவத்தைப் பார்த்தோம், இனி அழகும் அருமையும் சேர்ந்து ஆடும் தாண்டவம்.

நல்லகாலம் பிறந்து நம்மவருக்கு அறிவு மேம்பட்டு, சந்நியத்தில் ஆர்வமுண்டாகி, வீரம், ஆனந்தம், ஞானம் எல்லாம் உண்டாகி, மக்கள் கண்ணுக்கெல்லாம் விருந்தாக

தொடர்ச்சி 4ம் பக்கம்

# வைதாரையும் வாழவைக்கும் வள்ளல்

திரு. க. இராமச்சந்திரன்

பொதுவாகச் சைவமக்களாலும் சிறப்பாக சுப்பிரமணிய பக்தர்களாலும் மிகவும் விசேடமாகக் கருதப்படும் கந்தர்சஷ்டி வாரம் இது. ஆறுநாள் விரதத்தையும் அனுஷ்டிக்க முடியாதவர்கள் கடைசிநாளாகிய சஷ்டியிலன்றாவது விரதம் இருப்பது எம் நாட்டில் தொன்றுதொட்ட வழக்கமாகும். இக்கந்தர் சஷ்டி விரதமானது பக்தரக்ஷ சத்துரு சம்ஹார முருகப் பெருமானைக் குறித்து நோற்கும் நோன்புகளுள் முதலாயதாகும். அதன் மகிமையையும் உத்தியாபன முறையையும் விளக்கும் மயூரகிரி புராணம், "நெடிய வவ்விரத சூளாமணியினை நெறியினோற்கின்றார், படியினிற் பெரிது வாழ்ந்து குகனபதம் படர்வார் திண்ணம்" என வற்புறுத்துகின்றது. சஷ்டியிலன்று கொண்டாடப்படும் சூரசம்ஹார சம்பவம் நடந்தது ஆரம்பயுகமாகிய கிருதயுகத்திலென்பர். "கலியுகவரதர்" என்று புகழ்ந்து போற்றப்படும் சுப்பிரமணியக் கடவுள் இந்த யுகத்திற்கு மாத்திரமன்றி முந்திய மூன்று யுகங்களிலும் கண்கண்ட தெய்வமென்பது இந்த உண்மையால் வெளியாகின்றது. இம் மண்ணுலகில் நாகரிக முதிர்ச்சி பெற்று வழிபாட்டை ஆரம்பித்த மனிதன் தமிழன். அவன் முதன் முதல் அழகன்னும் முருகனை வழிபட்டானென்னும், அவ்வழிபாட்டாளடைவில் முருகனை வணக்கமாய் மாறியதென்றும், அதன்பின்னரே ஏனைய வழிபாடுகளெல்லாந் தோன்றினவென்றும் ஆராய்ச்சியாளர் முடிவுகட்டியுள்ளனர். எத்திறம் பார்க்கினும் தமிழ்த் தெய்வமாம் முருகனே முதல் தெய்வமெனக் கூறுதல் புகழ்ச்சியுரையாகாது.

'குமரன்' 'முருகன்' என்றதும் அழகுணர்ச்சி நமதுள்ளத்தில் தட்டி அங்கே ஆனந்தம் பொங்குகின்றது. அப்பெருமானை வழிபட்டால் நமது உறுப்பு ஒவ்வொன்றும் அழகு பெறும் என்ற நம்பிக்கை உதிக்கின்றது; அவர் என்றும் இளையோனானபடியால் அவர் அடியார்களாகிய நாமும் என்றும் இளமையோடிருக்கலாமென்ற எண்ணமும் எழுகின்றது. எனினும் சுப்பிரமணியக்கடவுளின் சிறப்பு இலக்கணம் அவரது அளப்பருங் கருணையேயாம். தமிழில் தம்மை வைதாரையும் வாழவைக்கும் அருள்வள்ளல் அவர். 'குருநாதன்' என்ற திருநாமம் அவருக்கு மாத்திரம் சூட்டப்பட்டதும் அக்கருணைகாரணமாகவேபோலும். "கருணைதிருவுருவாய்க் காசினிக்கே வந்து, குருபரனென்றோர் திருப்பேர் கொண்டு" என்றனர் குமரகுருபர சுவாமிகளும். உலக உறவில் அன்னையையும் பிதாவையும் முன்னணியில் வைக்கின்றோமெனினும், அவர்களிலும் பார்க்கப் பன்மடங்கு உபகாரத்தை நமக்குச்செய்பவர் ஆசிரியனே. நல்லறிவூட்டி, நாம் தவறும்போது தடுத்தே தண்டித்தோ திருத்தி நல்வழிப்படுத்தி, இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய நன்மைகளையெல்லாம் அன்புடன் அளிப்பவர் குருவன்றோ? இந்த முறையில் சூரபதுமனைச் சுப்பிரமணியக் கடவுள் தடுத்தாட்கொண்ட கருணைப் பெருக்கை விளக்குவதே சூரனோடாரின அருங்கருத்தாகும். அதுவுமன்றி, அறுபூதச் செல்வர்களின் அகக் காட்சிகள் பக்தர்கட்கும் பாமரர்கட்கும் புலனாகும்பொருட்டு புராணங்கள் எழுந்தனபோது, அவற்றிலடங்கிய தத்துவங்களெல்லாம் பேரும் உருவமும் குணமும் பொருந்தி புறத்தே தொழில்புரியும் நியதிக்குள்ளாகின்றன. புறவழிபாட்டில் முதிர்ச்சியடைந்தசாதகன் அகவழிபாட்டில் ஆழ்ந்து ஈடுபடும்போது இந்தச் சூரன்போர் நடக்குமிடம் தனது சொந்த நெஞ்சமேயென உணர்கிறான். இராம-இராவணயுத்தம் நடப்பதும் அங்கேயாம்; மகாபாரதப்போர் சதா நடந்துகொண்டிருக்கும் குருக்ஷேத்திரமும் அதுவேயாம். மேலும், நம்ம வானூலுக்குடன்பாடானமுறையில் கணித சாஸ்திர ரீதியாக மிகவும் நுட்பமாயமைந்துள்ள மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம் முதலாய நாள்கள் ஏன் விசேடமாகக் கருதப்படுகின்றன வென்பதைத் துருவி ஆராய்வோமானால், அத் திருநாட்களெல்லாம் யோகசித்தியால் பிண்டத்தில் கண்டதை புறவழிபாட்டின் பொருட்டு அண்டத்தில் அமைக்கப்பட்டனவேயென்பதுபுலனாகும். "சந்திரன் சூரியன்றற்பரன் றானுமிற், சந்திரன்றானுந் தலைப்படுந் தன்மையைச் சந்தியிலே கண்டு", "மதியமுஞாயிறும் வந்துடன் கூடித் துதிசெய்பவரவர் தொல்வானவர்கள்", "வெங்கதிருக்குஞ் சனிக்கு மிடைநின்ற நங்கையைப் புல்கிய" என்பன போன்ற திருமூலர் வாக்குகளில் அத் தத்துவ விளக்கத்தைப் பார்க்கக் காணலாம். தோத்திரத்திற்கு திருவாசகம் என்ற உண்மையைத் தமிழுலகு அறிந்து அநுபவிக்கின்றது. ஆனால் சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்பதை ஏதோ தவக்குறைவால் இன்னும் நன்குணரவில்லை. யோகி சுத்தானந்தரின் தவசக்தி மூலம் அந்தப் பேருண்மையும் பூரணமாய் அண்மையில் வெளிவருமென எதிர்பார்க்கின்றோம்.

சஷ்டி விரதம் அனுஷ்டிப்போரில் பெரும்பாலார் கந்தர் சஷ்டி கவசம் படிப்பார்கள். சிலர் கந்தர் கலிவெண்பாவையோ, திருப்புகழ், கந்தரலங்காரமுதலிய அருணகிரிநாதர் பாடல்களையோ பாராயணஞ் செய்வார்கள். பக்தியுடன் பாண்டித்தியமும் பெற்ற வேறு சிலர் நக்கீரதேவர் அருளிய திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் பண்ணுவார்கள். ஆனால், பண்டிதர்களும், பாமரர்களும், எழுத்தறியாப்பாட்டிமாரும் பாலர்களும், எல்லோரும் ஒருங்கே பயன்பெறும் முறையில், கோயில்களில் சூரபதுமன் வதைப் படலத்தை ஒருவர் படிக்க இன்னொருவர் கருத்தைத் தெளிவாய் விளக்குவதே பழைய கிராம வாழ்வில் அமைந்துள்ள ஓர் அரிய வழக்கமாகும். சின்னஞ்சிறு வயசில் எமக்குக் கந்தபுராணப் பக்திரசத்தை வாரியம்மைத் தாயார் ஊட்டியது இந்த வழக்கத்தின் உதவி கொண்டேயாம். தற்போதைய கிராம வாழ்வில அப்பழக்கம் அருகிவிட்டது சில இடங்களில் இருந்த இடமே தெரியாமல் மறைந்தொழிந்த தென்லாம். அந்தக் காலத்திற் கேற்ற புதுமுறையில் திருத்தியமைத்த பெருமை திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகட்குரியதாகும். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி இன்று ஸ்ரீ பொ. குமாரசுவாமி அடிகள் மகாமுமபு ஜீர்ப்பிட்டி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஒழுங்காகக் கந்தபுராணப்பிரசங்கஞ் செய்துவரும் அருந்தொண்டை ஆங்கு பாராட்டி விரும்புகின்றோம்.

(வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாம் ஏன் பிறந்தோம்"

(திரு. கா. கந்தப்பு அவர்கள்)

(முற்றொடர்)

"ஆர்க்கு மிடுமின் அவரிவ ரென்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்'
"யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"

நாம் வாழ்த்த வாயுந் தாழ்த்தச் சென்னியுந்தந்த தலைவனை மனம் கசிந்துருக திரிகரண சுத்தியுடன் விதிப்படி வணங்கவேண்டும். இதுவே நாம் விடுதலை அடைதற்குகந்த வழியென்க.

"நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி"
"கோமான் நின்திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாவாதே இருக்கின்றேன் சதுராலே சார்வானே"
"ஆக்கையாற் பயனென் அரன் கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டிப் போற்றாதவிவ்வாக் கையாற் பயனென்'

எனவுந் தமிழ்மறை பெருமுழக் கெடுக்கின்றமை காண்க. அன்றியும்
"மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம் வாக்குக்காயம்
ஆனிடத்தைந்து மாடும் அரன் பணிக்காகவன்றோ"

இம்மானுடப் பிறவியைப் பெற்றுக்கொண்டமை, இறைவழிபாடு ஆற்றி, விடுதலை அடைதற்கே யென அருணந்தி சிவாசாரியருந் திருவாய் மலர்ந்தனர்.

நாம் மாய வாழ்க்கையை மெய்யென்றெண்ணிவிடலாகாது. பிறவியென்னுமிக்கடலை நீந்த இறைவனின் பேரருளை நாடவேண்டும்.

நாம் பெரிதென மதிக்கும் இவ்வுடல் "சீவார்ந்து ஈமொய்த்தழுக்கொடு திரியுஞ் சிறுகுடில்" அன்றியும் "மெய்ப்பால நரம்பு கயிறாக மூளை என்பு தோல் போர்த்த குப்பாயம்" ஆதலின் இவ்வுடலம் உள்ளபோதே பெற்றவர்க்கு மெய்ப்பொருளாம் மெய்ம்மறைவனை யடைந்துய்தற்கு வழிதேடவேண்டும்.

"நாடு நகரமு நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாகக் கொள்வனே"

எனத் திருமூலநாயனாரின் திருமந்திரம் பெருமுழக்கெடுக்கின்றமை கண்டு மகிழ்க. தானம், யாகம், தீர்த்தம், ஆச்சிரமம், தவங்கள், விரதம் ஆகியன புண்ணியம் எனப்படும். இவை போகத்தை ஊட்டி பிறப்பைத் தருவன. பிறவாநெறியைத் தருவதாகிய சிவபுண்ணியத்தையே செய்தல் வேண்டும். சற்புத்திரமார்க்கம் சகமார்க்கம் தாசமார்க்கம் சன்மார்க்கம் எனச் சங்கரனையடையும் வழி நான்கு ஆகும். இவை சிவபுண்ணியமெனப்படும். சரியை முதல் ஞானமீறாய பதிபுண்ணியங்களுள் ஞானம் தவிர்த்த ஏனைய மூன்றும் பதமுத்தியையே தருவனவாம். ஞானம் ஒன்றே பரமுத்தியைத் தரவல்லது. நாமெய்ஞ்ஞானிகள் சொற்றார்கள் என்னது

யான் என ஆணவமுனைப்போடு கூடிச்செய்யும் கருமங்கள் புண்ணிய பாவங்களை ஈட்டுவன; அன்றியும் மீட்டும் பிறத்தற்கேதுவாயுள்ளன. நம்செயலற்று இறைபணியில் நின்று நம்கடன் ஆற்றவேண்டும்.

"பிறக்கின்ற பொன்று பயனுற வேண்டிடின்
இறக்கின்ற காலத்து மீசனை யுன்குஞ்
சிறப்பொடு சேருஞ் சிவகதி பின்னைப்
பிறப்பொன்றிலாமையும் பேருலகாமே"

நாம் எத்தொழிலைச் செயினும் எவ்வவஸ்தைக்குள்ளாயினுஞ் செந்நெறியான் கழல் மறப்பதன்றி மனத்தினுள் வைக்கவேண்டும். இக்காயம் நீங்கி இனியொரு காயந்தாங்குப் பிறவாமற்போமவழி இஃதேயென்க.

"எனக்கினைச் செயல் வேறிலையாக,
மிக்கொரு நின்றனக்கெனத்தகு முடல் பொருளாவியுந் தந்தேன்
மனத்தகத்துள வழுக்கெலா மாற்றியெம் பிரானீ
நினைத்ததெப்படி யருளுதல் நீதம்"

சிந்தை செய்கை கேள்வி வாக்கு ஐம்புலன் ஆய இவை சிவநெறிச் செந்நெறியை நாட, நாம் அந்நெறியில் நின்று பஞ்சாக்கர வன்மை கடைப்பிடித்து யாவும் இறைசெயலேயென்றுணர்ந்து விருப்பு வெறுப்பு உணர்வு உணராமை போக்க, நினைப்பு மறப்பற்று நிரதிசயானந்த வெள்ளத்து மூழ்கி ஓடும் பொன்னும் ஒக்கநோக்குந் நிலையினராய் தவிரப்பசதத்தினிடாத நிலையடைந்து "சும்மா இருக்கப்பெறும் நிலையை அடையின் அஃதே மெய்ஞ்ஞானநிலை ஆம். இந்நிலை வைராக்கியமுறுதற்கு நாம முயலவேண்டும். அவனருளே கண்ணாகக்காட்டக் கண்டு சாலைய ஆதி காரியங்களையும் உண்மையான முறையில் புரிந்து வரல்வேண்டும். உலகப்பொருட்களில் பற்று வையாது இறைவனையே பற்றவேண்டும். அந்நிலை சிறந்தின் அஃது ஞானநிலையைப் பயப்பிக்கும்.

மெய்ஞ்ஞானநிலை கைவரப்பெற்ற மெய்ஞ்ஞானிக்கு விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் வேண்டா. அவர் செய்வன எல்லாந் தவம் ஆம்; ஆசைப் பெருங்கடலைக்கடந்த உத்தம புண்ணிய புருஷன் அவனே ஆம். பகைவனென்றும் நட்பினனென்றும் அரசனென்றும் தோட்டி என்றும் பேதமில்லை. அவர் உலகத்தவர் போல் ஏதேனும் ஒருதொழில் புரிந்தாலுஞ் சரி புரியாது விடினுஞ் சரி அன்றிப் பொன்முடி சக்ரவர்த்தியாயினுந் தாமரையிலையிற் றண்ணீர் போல் பற்றற்றிருப்பர்.

"ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையில்லை நாடு வதொன்றில்லை"

என்று தொடங்கும் சிவஞானசித்தித் திருவிருத்தம் மேற்காட்டியவற்றிற்குப் பிரமாணமாயமைந்தமை காண்க. இந்நிலை கைவரப்பெற்ற ஞான்று காயபாயம் நீங்கும். ஆகந்த பஞ்ச மேளநக தொடக்கும். நாம் முத்திநிலையை விரும்பி ஏற்றன செய்தலின்றி உலகபோகங்களில் விருப்புற்று நல்லன தவிர்த்து அல்லன புரிதல் [illegible] பிறப்பு அவாவின்றென [illegible] தாமமாவது [illegible] காகவா நாம் பிறந்தோம்? இல்லை! பிறப்பறுத்துப் பிறவாநெறியையடைதற்காகவே.

"ஆட்டைச் சுமந்த நின் பாதார
விந்தத்திலன்பு செய்யாக்
கூட்டைச் சுமந்து குடும்பத்தை
யோம்பிக் குறுக்கிடையாய்
பாட்டைச் சுமந்த பயன் தெரி
யாமலப் பாட்டெழுது
மேட்டைச் சுமந்தவர்க் கின்பமு
ண்டோ கச்சியேகம்பனே"

பஞ்சகிருத்தியத் திருநடனத்தைத் தாங்கிய தேவரீரின் பாததாமரைகளிடத்து அன்பு வையாது இம்மனிதப்பிறவியைப்பெற்று உலக துக்க சாகரக் கடலிலழுந்தித் துன்பமுறுதல், தத்துவார்த்தம் அடங்கிய சிறந்த செய்யுள் எழுதப் பெற்ற ஏட்டை வைத்துக்கொண்டு அச்செய்யுளின் பொருள் தெரியாது சீகர்க்கும் எனப் பெருமுனிவராகிய சட்டநாத வள்ளலார் 'சிவாலய கச்சியாலயில்' திருவாய் மலர்ந்தனர். ஆதலின் நாம இறைவனிடத்து ஆராத்தண்ணீரும் அடங்காத அன்பும் உடையராதல் வேண்டும். பிற உயிர்களிடத்தன்பு வைக்கவேண்டும். சிவனடியாரையும் சிவனெனவே கண்டு வணங்கவேண்டும். நாம் சற்பாத்திரர்க்குத் தானஞ்செய்யும் இடத்து அவரைச் சிவனென மதிக்கவேண்டும். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று கூறல் ஆகாது. உள்ளும் புறமும் பரிசுத்தமுடையராதல் வேண்டும். மண்ணாசை பொன்னாசை மாதராசையைப் படிப்படியாய் வெறுக்கவேண்டும். ஆமையைப்போல புலன்களையும் அடக்கித் தூயவழியிற் செல்லவிடவேண்டும். வைதிடினும் வாழ்த்திடினும் மாயமெலாஞ் செய்திடினும் மனஞ் செறுத்திடினும் பொறுமை இழத்தல் ஆகாது. பஞ்ச பாதகங்களையும் படிப்படியாய்க் குறைத்து வரவேண்டும்.

"பொய்யாத புனன்மூழ்கிச் சாந்
தமெனும் பொடிபூசிக் கருணைமணி
பூண்டெஞ்ஞான
மையாதவுளமெல்லா மைய காவ
ணவிலாத மாமனுவை வனமேலி
ரையாற பாருமுற்ற டேந்துகின்ற
வாரந்த மீதேக நின்னடிப் போ
துக்கே
கொய்யாத மலர்கொண்டு கரு
ச்சித்தேத்திக் கும்பிட்டேனெனை
பிறவி பிணிவிட்டேனே"

'மண்போற் பொறுமையுடை
யோரு மதிபோற் சாந்தமுடை
யோரும்
பண்போலு மைப் புனைந்தோரும்
புனல்போலொழுக்கம் பூண்டோ
ரும்
கண்போலிக்க முற்றோருங்
கனல்போற புசிக்குங் கதிரோரும்
விண்போலிவை யுதிர்த்தோரும்
பிறவாரிந்த மேதினிக்கே"

சைவசன்மார்க்கினராய நமக்குச் சோபானமாயமைந்த சரியையாதி நாற்பாதங்களிலும் பற்றற்ற சிந்தையுடன் ஒழுகவரின் படிப்படியாய் நயமிக்கதமைந்த உலகியல் தொடர்புகள் நீங்கி உண்மைஞானநிலை கைவரும். சரியையில் ஆணவத்தின் கால்பங்கு நீங்கும், கிரியையில் அரைப்பங்கு நீங்கும். யோகத்தில் முக்காற்பங்கு நீங்கும். சிவஞானத்தால் ஆணவமலம் முழுவதும் நீங்கும். மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் ஆய சத்திநிபாதம் வரும். இருவினையொப்பு உண்டாம். ஆசாரியனாகிய இறைவன் குருவடிவங்கொண்டு எழுந்தருளிச் சுத்திகளைச் செய்து நீ ஐம்புலவேடரோடு கூடி வைகினை [illegible] இருக்கை கொண்டாய்; நின் பெருந்தன்மை இவ்வியல்பற்று என அறிவுறுத்தி ஆட்கொள்வன.

## பாரதியாரின் கவிப்பண்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் நிற்கிறார்கள். கவி எப்படி வரவேற்கிறார் பாருங்கள்!

முன்னம் போ போ போ என்றார் கவி. இப்போது,

"ஒளிபடைத்த கண்ணினாய்
வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய்
வா வா வா
களிபடைத்த மொழியினாய்
வா வா வா
கடுமைகொண்ட தோளினாய்
வா வா வா
தெளிவுபெற்ற மதியினாய்
வா வா வா
சிறுமைகண்டு பொங்குவாய்
வா வா வா
எளிமைகண் டிரங்குவாய் வாவாவா
ஏறுபோல் நடையினாய் வா வா வா"

உண்மையைச் சொல்லும் நூல்களையே ஆதரிப்பாய், பொய்யை எழுத இசைகிறேன் என்று கச்சை கட்டமாட்டாய், பொய்ப்பிரசாரம் செய்யும் நூல்களைப் படையாக வைக்கவே மாட்டாய், அக்கினிக்கு இரையாக்கிடுவாய், அப்பேர்ப்பட்ட நல்ல ஆன்மாவைப் பார்த்து அப்பா வா! என்று அழைக்கிறார்.

"மெய்ம்மை கொண்ட நூலையே
அன்போடு
வேதமென்று போற்றுவாய்
வா வா வா
பொய்ம்மை கூறல் அஞ்சுவாய்
வா வா வா
பொய்ம்மைநூல்கள் எற்றுவாய்
வா வா வா"

ஏதோ ஒரு சாபங் காரணமாகவே இந்தக் கீழான நிலையில் இருக்கிறோம். (எப்போது காரணங் கற்பிக்க முடியவில்லையோ அப்போது சாபம் என்று தானே சொல்லிவிட வேண்டும்) இந்தப் பாழாய்ப்போன சாபம் நீங்கும்படி மனவலியும், உடலவலியும் படைத்த எதிர்காலம் பெற்றெடுத்த மகனே வருவாயாக என்று ஆலிங்கனம் பண்ணுவதற்குக் கைகளை நீட்டுகிற பாவம்.

"ஓய்தலையற்ற சிந்தையாய்
வா வா வா
நோய்களற்ற உடலினால் வா வா வா
தெய்வசாபம் நீங்கவே நங்கள் சீர்த்
தேசமீது தோன்றுவாய் வாவாவா"

ஒரே விஷயத்தைத் தான் டெனிஸனும் சொன்னார், பாரதியாரும் சொன்னார். சோகந்தான் பாவம், டெனிஸனிடம்; நம்பிக்கைபாவமும் கொஞ்சமிருக்கிறது. ஆனால் பாரதியார் பாவம் முற்றிலும் வேறு. உருவம், துள்ளல், தாளம் எல்லாம் வேறு. மூலத்துக்கும் பாரதியார் பாடலுக்கும் சம்பந்தமே இல்லையென்று சொல்லும்படி அவ்வளவு வேறுபட்டுள்ளது. ஏதோ டெனிஸன் எழுதிய ஆங்கிலக்கவி பாரதியாரை அந்த விஷயங்கள் சம்பந்தமாகச் சிந்திக்கச் செய்தது. அவ்வளவுதான்! உணர்ச்சி எழுந்ததும் அதற்குத் தக்கவாறாகத் தமிழ்ச் செய்யுள் வந்துதவியதும், பாவங்களின் புதுமையும் வேகமும் எல்லாம் தனி. "போகின்ற பாரதம்; வருகின்ற பாரதம்" என்ற இரண்டு கவிகளும் பாரதியின் சிறந்த பாடல்களைச் சேர்ந்தவை, உண்மையான சிருஷ்டிகளே! தமிழ் மக்களின் [illegible] தான்!

(வரும்)

---

"ஐம்புல வேடரி னயர்ந்தனை
வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தி
னி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையி னரன்கழல
செலுமே"

எனவருஞ் சிவஞானபோத சூத்திரப் பிரமாணத்தால் யாவுந் தெளிவானமை காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரியில் கத்திக்குத்துச் சம்பவம்

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் குற்றுயிராகக் கிடந்த ஈட்டார வகுப்பைச் சேர்ந்த சரவணமுத்து-வேலுப்பிள்ளையிடம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடு இராத்திரியில் சாவகச்சேரி உத்தியோகப் பற்றற்ற நீதிபதி திரு. வி. எஸ். கார்த்திகேசு மரண வாக்குமூலம் பதிந்தாரென அறியப்படுகிறது.

காயமடைந்த சரவணமுத்து—வேலுப்பிள்ளை கூறியதாவது.—

'இன்று மாலை 5 மணிக்கு எனது மருமகன் சின்னத்தம்பி—கதிர்காமு என் வீட்டுக்கு வந்து தனது மனைவியும் எனது மகளுமாகிய மகேஸ்வரியை தன்னுடன் கூட வரும்படி அழைத்தார். அவள் வர முடியாதெனச் சொல்லவே கதிர்காமு எனது முதுகில் ஒருமுறை கத்தியால குத்திவிட்டு மகேஸ்வரிக்கும் எனக்கும் அப்பால் இழுத்துக்கொண்டுபோய் இருமுறை கத்தியால் குத்தினர். நான் உடனே எனது மகள் நின்ற இடத்திற்குச் சென்று அவளைக் காப்பாற்றிய போது கதிர்காமு எனது வலது கையில் மீண்டும் குத்திவிட்டு ஓடிவிட்டார். எனது மகளும் மருமகனும் பிரிந்து வாழ்ந்திருந்தார்கள்,

கதிர்காமு என்பவர் தலைமறைவாகவே இன்னமும் இருக்கிறாராம். பொலிசார் புலன் விசாரித்து வருகின்றனராம்.

## கலைச் சொற்கோவை

### கல்விநூலும் அகநூலும்

கல்வி, அகநூல்களில் வழங்கும் ஆங்கில கலைச் சொற்களின கருத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களைத் திரட்டி வெளிப்படுத்துதற்கு அரசினர் ஆங்கில ஆசிரிய கலாசாலைத் தலைவர் திரு. க. ச. அருணந்தி M. SC., அவர்களும்; அக்கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் B.O.L., அவர்களும் தொடங்கியிருப்பதாகே அறிகின்றேம். இச்சொற்கள் இந்து வித்தியாபோதினியில் பகுதி பகுதியாகவெளியிடப்படும். பொருத்தமான சொற்களும் உபயோகமான குறிப்புகளும் ஆசிரியர்களால நன்றியுடன ஏற்கப்பட்டுக் கொள்ளப்படும். தமிழறிஞர்கள் இச்சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்துவார்கள என்றெண்ணுகின்றேம்.

## நாமகள்வித்தியாசாலையில் கல்வி மந்திரி

சென்ற 19-10-44ல் கொக்குவில் நாமகள் வித்தியாசாலைக்குக் கல்வி மந்திரி அவர்களும், உதவி வித்தியாகர்த்தர் அவர்களும் விஜயம் செய்து பாடசாலையில் சிறப்பாக நடைபெற்றுள்ள தோட்ட வேலைகளையும், மாணவர் ஆடல் பாடல்களையும் கண்டு ஆசிரியர்களைப் பாராட்டியதோடு "யுத்த சேமிப்புப் பத்திரங்களில் மாணவரும், பெற்றோரும் பணஞ் சேர்த்து வைத்தற்காக முயற்சிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர்.

—கடித,


### காணி விற்பனவு விளம்பரம்

ஓமந்தை புகையிரத ஸ்தானத்துக்கும் கண்டி றோட்டுக்கும் சமீபத்திலுள்ள $16\frac{1}{2}$ ஏக்கர் வயல் நிலமும் குடியிருக்க வசதியுள்ள (கிணறுமுள்ள) வளவும் விற்பனவுக்கிருப்பதால், வேண்டவிரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும். ஓமந்தையில ஞானசேகரம் கமம் என விசாரித்தால் யாரும் காணியைக் காட்டுவர்.

Miss. ஞா. தேவரத்தினம்,
சாசாலை, சாவகச்சேரி.

Mis. 139 23, 26, 30-10.44


## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

தே யென்ற வாக்கியத்தையும் நினைத்தேன்; நான் நாளைக்கு இந்த வீட்டை விட்டு என் பெற்றார் வீட்டிற்குப் போனாலும், அவர்கள் எனக்கு வேறு விவாகஞ் செய்துவைக்கத்தான் முயற்சி செய்வார்கள்; அங்கே போகாமல் இங்கே யிருக்கலாமென்றால் இந்தச் சீதாலட்சுமி என்னை மனச் சமாதானமாக விருக்க விடமாட்டாள்; கின்றாலும் நிஷ்டூரம் போனாலும் பொல்லாப்பு என்ற நிலைமை நமக்கு வந்துவிட்டது; இப்படி இருதலைக்கொள்ளியினுள் எறும்போத்து இடையில் நின்று தியங்குவதைக்காட்டிலும் இந்த உயிரை விட்டுவிடுவது நல்லது; நான் இந்தவுலகத்தில் நல்லாய் வாழும் விதியுடையவளாயிருந்தால், என் அன்பர் இடையில் என்னைவிட்டுப் பிரிவாரா? பெண்ணாய்ப்பிறந்தவள், அதிலும் என்போன்ற ஒரு இளம்பெண் எவ்வளவு மனக்கட்டுப்பாட்டோடு சாவதானமாகக் காலங்கழித்தாலும், இந்தப் பொல்லாத உலகம் வசையையே சுமத்திவிடும்; ஆனால் நான் என்னுயிரை மாய்த்துக் கொள்ளலாமோ வென்றால், தற்கொலை புரிவோர்க்கு மீளா நரகமென்று எங்கள் சாத்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறதாமே; என் மரணத்தைக் காப்பதற்காக நான் தற்கொலை செய்தால அதுவுந் தோஷமாகுமா; ஆகாது; அதிகம் யோசித்தென்ன, எங்கேனுங் குளத்திலாயினும் ஆற்றிலாயினும் வீழ்ந்து என்னுயிரை விடுவதுதான் புத்தி; இதனையும் இப்பொழுதே செய்து விடவேண்டும்; அடுத்த மணித்தியாலம் இந்த மனம் எப்படி மாறுமோ நான் அறியேன் என்று யோசித்து என் மனத்தைத் திடப்படுத்தினேன்; அப்பொழுது நேரம் நடுச்சாமத்திற்கு மேலிருக்கும். ஊரடங்கியுள்ளதாகிய இந்த நேரமே நான் நினைத்ததைச் செய்தற்கு வாய்த்ததோமென்றெண்ணினேன்; மெல்ல எழும்பிக் கதவைச் சத்தப்படாமல் திறந்துகொண்டு வந்து மாமனார் படுத்துறங்கும் அறையின் கதவண்டை நின்று பார்த்தேன்; அந்த அறையில் எவ்வகையான ஆரவாரமுமில்லை; சீதாலட்சுமி நித்திரையோ என்று அறிவதற்காக, அவள் படுத்திருக்கும் அறையின் வாசலண்டை மெல்ல மெல்ல வந்து நின்றேன்; என் கால்கள் பதறின; உடல் சோர்ந்தது; நெஞ்சிலே பெரிய கல்லைப்பிட்டதுபோலிருந்தது; ஆனால் அவளும் பிள்ளையும் கிடக்குமறையில் எவ்வகையான சத்தமுங் கேளாமையினால அவர்களிருவரும் நித்திரையென்றெண்ணிக்கொண்டேன்; உடுத்ததுணியோடும் அணிந்திருந்த ஆபரணத்தோடும் புறப்பட்டுத் தலைவாசற் கதவண்டை வந்தேன்; தலைவாசற்கதவு திறந்தபடியேயிருந்தது; தலைவாசலைக் கடந்து தெருக் கதவண்டை வந்தேன்; அன்றிரவு இந்தப் பிணக்கெல்லாம நடந்தமையினாலே, அக்கதவும் பூட்டப்படாது சார்த்தப்பட்டேயிருந்தது; சத்தமில்லாமல் மெல்லக் கதவை நீக்கித் தெருவில் வந்தேன்; அமாவாசையிருளோடு கூடிய இராக்காலம்; எங்கே பார்த்தாலும் நிசப்தமாயிருந்தது; பேயும் உறங்குஞ் சாமம்; தெருவில் வந்தவுடன மனமுஞ் சரீரமும் பதறியன; செய்வதின்னதென்பது புலப்படவில்லை; வீட்டைவிட்டுப் புறப்பட்டது நல்லதா யோசிக்க வேணும்; தெருவில் வந்துநின்று கொண்டு யோசிப்பதிற் பயனில்லை; ஒரு சமயம் மாமனார் விழித்தெழுந்து என்னைக் காணாமையால் தேடப் புறப்பட்டால், நான் தப்பிப்போனபாடில்லை; மேலும் இன்னமும் அவமானம் அதிகப்படும்;

### சாகத்துணிந்தவளுக்கு அச்சமென்ன?

அதனை யறிந்தாற் சின்னமாமியும் என்னைச் சிரிப்பாள்; சாகத் துணிந்த எனக்கு இனிப் பயமென்ன? என்று மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு வேகமாக நடந்தேன்; மாமனார் வீட்டிலிருந்து எங்கள் வீட்டிற்குப் போகும் மார்க்கமொன்றுதான் எனக்குத் தெரியும்; அந்த மார்க்கமாகப் போகும் போது எங்கே பார்த்தாலும் இருட்டாகவிருந்தது; என் மனத்தில் அச்சம் அதிகப்பட்டது; நான் போகும்மார்க்கத்தில் எதிரே எவரோ வருவதுபோலவும், பிறகே நின்று யாரோ என்னைக் கூப்பிடுவதுபோலவும் புலப்பட்டது; அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பேய் என்றவிதமாய் எந்தப் பக்கத்தைப் பார்த்தாலும் இருளாகவும் பயங்கரமாகவுங் காணப்பட்டன. பயந்து பயந்து மாமனார் வீட்டிலிருந்து அரைமைல் தூரம் போய்விட்டேன்; அப்பால் ஒரு சந்தியில் மரச் சூழலும் அதனைச் செறிந்த இருளும் காணப்பட்டமையினால் என்னாற் போகவும் முடியவில்லை; மீண்டு மாமனார் வீட்டிற்கு வரவும் முடியவில்லை; அச்சமேலீட்டினால் நெஞ்சு வெடிக்க என்னுயிரும் நீங்கவிடுமென்றெண்ணினேன்; படுக்கையறையிற் கிடந்துகொண்டு நான் எண்ணின எண்ணங்களும் யோசித்த யோசனைகளும் பஞ்சாய்ப் பறந்துபோயின; நடுக்கடலில் மழையோடுங் காற்றோடும் இருளோடுங்கூடிய சமயத்திற் கரையறியாது திசையறியாது கலங்கும் மரக்கலம்போலாயினேன; முன் செல்லக் கூடாமையினால் தெருநடுவில் நின்றேன்; மாமனார் வீட்டிற்கு மீளுவதோ பெற்றார் வீட்டிற்குப் போவதோ என்று யோசித்தேன்; தற்கொலை செய்யும் நோக்கத்தை அறவேயொழித்துவிட்டேன். இப்படி நின்று சஞ்சலப்படும் நேரத்திலே சடுதியில் ஒருபெரு வெளிச்சந் தோன்றியது; அந்த வெளிச்சம் எனக்கெதிரே வரும் மோட்டார் இரதத்தின வெளிச்சமெனப் புலப்பட்டது; இந்த இடத்தில் நின்றால் இரதத்தில் வருபவர்கள் தன்னந்தனியே அகாலத்திற புறப்பட்ட என்னைக் காண்பார்கள், கண்டாற் சங்கடமாகும் என்றெண்ணிக்கொண்டு நான் ஓடிப்போய்த் தெருவோரத்தில் நின்ற ஒரு பெருமரத்தின் பின்னே மறைந்து நின்றேன்; வேகமாக ஓடிவந்த இரதம் நான் மறைந்துநின்ற மரத்தடியில வந்தவுடனே நின்றுவிட்டது; உடனே அந்த இரதத்திலிருந்து இரண்டுபேர் இறங்கி அந்த மரத்தண்டை வந்தார்கள; என்னைக் கண்டார்கள்; நீ யார்? இந்த நேரத்தில் இங்கே ஏன வந்தாய்; உள்ளதைச் சொல்லு என்று என்னை அதட்டிக் கேட்டார்கள்; அந்தநேரத்தில் என்னுயிர் உடலைவிட்டு நீங்குவது போலிருந்தது; என்னால வாயமுறுந்து ஏதுமம்பேச முடியவில்லை; ஏங்கிப்படிப் பேசாமல் நின்றேன; "வா, வந்து இரதத்திலேறு" என்றார்கள்; நான் போய் ஏறுவிட்டால் என்னைத் தூக்கிக்கொண்டுபோய் இரதத்திலேற்றுவது நிச்சயமென்றெண்ணினேன்; ஒன்றும பேசாமறபோய் ஏறினேன்; அதில் ஒரு பெண்ணு மிருக்கக்கண்டு அவ்வியக்கத்திலிருந்தேன்; இரதம்புறப்பட்டு வேகமாகப் போனது. (வரும்)

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

( † இசைத்தட்டு )

### வெள்ளி அக் 27

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி எஸ் லோகநாதன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி எஸ் லோகநாதன்பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 ஆர் வி சுப்பிரமணியம் பாட்டு 5-40குரான்ஷரீப் 6 வி வேணுகோபால் கிளாரினெட் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 ஜப்பானியக் கொடுமை பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ஆனந்தம், ஆனந்தம் நாடகம் 8 ஆர் வி சுப்பிரமணியம் பாட்டு 8-45 வி வேணுகோபால் கிளாரினெட் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் (ஆங்கிலம்) 10 இசைவேளை 10-30 முடிவு.

### சனி அக் 28

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 என் கே சி புல்லாங்குழல் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 காலை இசை 9 முடிவு.

1 டி எஸ் வெங்கடாசலம்பிள்ளை வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஐரோப்பிய சங்கீதம் 2 தமிழில் செய்திகள் 2-05 கே விஜயராகவலு நாயுடு பாட்டு 2-30 முடிவு.

மாலை 5 டி எஸ் வெங்கடாசலம் பிள்ளை வயலின் 5-40 திருவரங்கக் கலம்பக விளக்கம் 6 கே விஜயராகவலு நாயுடு பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 தொழில் பிரச்னைபேச்சு 7-30அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி 8-15 நாடகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புல்லாங்குழல் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### ஞாயிறு அக் 29

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 குசேலோபாக்கியானம் 8-15 ஆங்கிலத்தில செய்திகள் 8-30 இசைக் கதம்பம் 9 முடிவு.

12 கதம்பம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாதர் பக்கம் 2 தமிழில் செய்திகள் 2 05 இசைக் கதம்பம் 2-30 முடிவு.

மாலை: 5 மூன்று வீணைகள் 5-40 தேவாராதனை 6 சிந்தாமணி சேஷசாயி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 ஜனத்தொகையும் விவசாயமும் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 எச் ராமசந்திர சாஸ்திரி புல்லாங்குழல 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 தில்ருபா, கோஷ்டிவாத்தியம் 10 இசைவேளை 10-30 முடிவு.

### திங்கள் அக் 30

காலை; 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில செய்திகள் 8 பாரதநாடககீர்த்தனை 8-15 ஆங்கிலத்தில செய்திகள் 8-30 பி எஸ் கோவிந்தசாமி நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 ஜானகி ஸ்ரீனிவாசன் பாட்டு 2 தமிழில செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை; 5 பி எஸ் கோவிந்தசாமிநாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஜானகி ஸ்ரீனிவாசன பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 தாலவகை † 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 சசய்திச் சித்திரம் 8 கே வி தியாகராஜன் பாட்டு 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 சுதந்திரத்தின அஸ்திவாரம 10 இசைவேளை 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்தியமகாசபை

### சமயபாடத் தேர்தல்

இச்சபையின் ஆதரவில் 1945ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சமயபாடப் பரீட்சை நடைபெறும். தேவாரம், உபந்நியாசம், புராணபடனம் ஆகிய மூன்றும் தேர்வுக்குரிய பாடங்களாம். வடமாகாணத்துள்ள வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம் தீவுப் பகுதிகள் ஆகிய ஒவ்வொரு பிரிவிலுமிருந்து ஒரு பாடத்துக்கு 25 பிள்ளைகளுக்கு மேல் தேர்வுக்கு மனுச்செய்தால் ஷை பாடத் தேர்வை அப்பிரிவிலே வசதியான ஓரிடத்தில் சபையாரால் நியமிக்கப்பெற்ற மத்தியஸ்தர்மூலமாய் நடாத்த ஒழுங்கு செய்யப்படும். ஷை எதாவது ஒரு பகுதியிலிருந்து 25 பேருக்குக் குறைய மனுப்பண்ணுவார்களாயின் அவர்கள் சமீபத்திலுள்ள தானத்துக்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு பாடத்துக்கும் மும்மூன்று பரிசில்கள் பெண்களுக்கும் ஆண்களுக்கும் வெவ்வேறாக ஒவ்வொரு தானத்துப் பிள்ளைகளுக்கும் கொடுக்கப்படும். பரிசில்கள் 1945ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் சைவமகாநாட்டில் கொடுக்கப்படும். மனுப்பத்திரங்கள் 1945ம் ஆண்டு பெப்ரவரி மாசம் 23ந் தேதிக்கிடையில் ஷை சபைக் காரியதரிசிக்குத் தலைமையாசிரியருடைய கைச்சாத்துடன் பெற்றுப் பதியப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். அவர்களின் வயது 31-1-45 வரை கணிக்கப்படும். பங்கு பற்றுபவர்கள் சிவதீக்ஷைப் பேறுடையவராயிருத்தல் நன்று.

### பாட அட்டவணை

#### தேவாரம்

I பாலர் கீழ்ப்பிரிவு (10 வயதுக்குட்பட்டவர்கள்)
1. தேவாரம்: பண்கொல்லி "நம்மையே புகழ்ந்து" என்ற தொடக்கப் பதிகம் (சுந்தரர்)
2. புராணம்: (அ) "வேத நெறி தழைத்தோங்க" (ஆ) "ஞானத்தின் திருவுருவை" (சம்பந்தர் புராணம்)

II பாலர்மேற்பிரிவு: (12வயது வரை)
1. தேவாரம்: பண் சீகாமரம் "கள்ளார்ந்த" என்ற தொடக்கப்பதிகம் (சம்பந்தர்)
2. திருவாசகம்: குழைத்த பத்து 6ம் 7ம் செய்யுட்கள்.
3. புராணம்: (அ) "அண்ணலை அனை" (ஆ) 'தூயவெண்ணீறு' (திருநாவுக்கரசர் புராணம்)

III மத்தியபிரிவு: (16 வயதுவரை)
தேவாரம்: பண் காந்தாரபஞ்சமம் "இடரினுந்தளரினும்" என்ற தொடக்கப் பதிகம் (சம்பந்தர்) திருத்தாண்டகம்: மூலத்தானே, திருவிருக்குக் குறள் திருவிசை: 'மாயிருஞாலம்' (திருவாவடுதுறை) திருவாசகம்: கோயிற்றிருப்பதிகம் 2ம் 7ம் 10ம் செய்யுட்கள், புராணம்: (அ) 'ஐந்துபேரறிவு' (ஆ) 'தெண்ணிலா' (சுந்தரர்புராணம்), திருப்புகழ்: 'எதுபுத்தி ஐயா' (சமாஜப் பதிப்பு)

IV மேற்பிரிவு (21 வயது வரை)
தேவாரம்: பண் பஞ்சமம் "கொடுகு வெஞ்சிலை" என்ற தொடக்கப்பதிகம் (சுந்தரர்), திருத்தாண்டகம்: "மனத்தகத்தான்" திருவிருத்தம்: "பொன்னார் திருவடி", திருவாசகம்: திருப்பள்ளியெழுச்சி 1ம் 2ம் 3ம் செய்யுட்கள், புராணம்: (அ) பண்ணின் பயனும் (சண்டேசுரர்) (ஆ) மறவாமையானமைத்த (வாயிலார்) திருப்புகழ்: 'கனவு கொண்டு' சமாஜப் பதிப்பு 445 வது செய்யுள்.

#### உபந்நியாசம்

I கீழ்ப்பிரிவு (12 வயது வரை)
1. விபூதி, 2. உருத்திராட்சம், 3. சமயக்கல்வி, 4. குருவழிபாடு.
இவற்றுளொன்று நேரம் 10 நிமி.

II மத்தியபிரிவு (16 வயதுவரை)
1. சமயகுரவர், 2. சைவானுஷ்டானம், 3. திருவள்ளுவர், 4. சிவஞான முனிவர்.
இவற்றுளொன்று நேரம் 12 நிமி.

III மேற்பிரிவு (21 வயதுவரை)
1. அப்பர், 2. சைவசாதனம், 3. திருவாசகம், 4. புராணங்கள்.
இவற்றுளொன்று நேரம் 15 நிமி.

#### புராணபடனம்

21 வயதுக்குட்பட்டவர்கள் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் பயன்சொல்லவும் படிக்கவும் தெரிந்திருக்கவேண்டும்.

திருவாதவூரடிகள் புராணம்: திருப்பெருந்துறைச்சருக்கம், 50ம் செய்யுள் தொடக்கம் முடிவு வரை.

இத்தேர்தலட்டவணையை மேற்படி சபைக் காரியதரிசியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: தேவாரங்கள் அதற்குரிய பண்ணுக்குப் படித்தல் வேண்டும். திருவாசகம் யாவும் மோகன இராகத்திற் படித்தல் வேண்டும். திருப்புகழும் புராணமும் விரும்பிய இராகத்திற் படிக்கலாம்.

இங்ஙனம்,
மு. மயில்வாகனம்,
அகில இலங்கைச் சைவ இளைஞர் ம. ம. ச. காரியதரிசி.

யாழ்ப்பாணம்,
22-10-44.

---

## 1943-44 அகில இலங்கைச் சைவ மகாநாட்டு வரவுசெலவுக் கணக்கு

### வரவு

| | ரூ. | ச. |
|---|---|---|
| சென்றவருட இருப்பு | 102 | 02½ |
| இவ்வருடச் சந்தாப்பணம் | 31 | 50 |
| நன்கொடை | 510 | 80 |
| ஆகமொத்தம் | 644 | 32½ |

### செலவு

| | ரூ. | ச. |
|---|---|---|
| தபாற் செலவு | 32 | 31 |
| அச்சடித்த செலவு | 14 | 40 |
| பிரயாணச் செலவு | 247 | 70 |
| சோடினை பூசை | 37 | 83 |
| உணவு வகை | 64 | 46 |
| சபைக் காரியாலய வாடகை | 30 | 00 |
| சிற்றேவல்காரன் வருட வேதனம் | 45 | 00 |
| கடதாசி முதலியன | 11 | 00 |
| பரிசுப் புத்தகங்கள் | 123 | 88 |
| நானாவகை | 32 | 30 |
| கையிருப்பு | 5 | 44½ |
| ஆகமொத்தம் | 644 | 32½ |

மு. மயில்வாகனம், காரியதரிசி. வ. கார்த்திகேசு, தனாதிகாரி.

பரிசோதித்துச் சரியெனக் காணப்பட்டது.

க. நவரத்தினம்,
கணக்குப் பரிசோதகர்.
24-9-44.

---

## கொழும்பு விவேகானந்த சபை

ஷை சபையாரால் சுபானு௵ பங்குனி௴ 26௳ (8-4-44) நடத்தப்பட்ட அகில இலங்கைச் சைவசமயபாடப் பரீக்ஷையில் விசேஷ பரிசு பெற்றவர்கள்:-

### மேற்பிரிவு

1-ம் பரிசு: ந. மகேஸ்வரி, கோப்பாய் சரவணபவானந்த வித்தியசாலை, 2-ம் பரிசு: த. சுப்பிரமணியம், தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை, 3-ம் பரிசு: வி. அன்னம்மா, மீசாலைதெற்கு விக்னேஸ்வர வித்தியாசாலை.

### மத்திய பிரிவு

தமிழ் வித்தியாசாலை

1-ம் பரிசு: வே. ஞானமணி, சுன்னாகம் மைலணி சைவ வித்தியாசாலை, 2-ம் பரிசு: ச. சற்குணம், வீமன்காமம் துவிபாஷா பாடசாலை.

ஆங்கில வித்தியாசாலை

1-ம் பரிசு த. இராசலிங்கம், தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை.

### கீழ்ப்பிரிவு

தமிழ் வித்தியாசாலை

1-ம் பரிசு: சி. வீரவாகு, வட்டு சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை.

2-ம் பரிசு: ச. சிவஞானசுந்தரம், தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை.

ஆங்கில வித்தியாசாலை

1-ம் பரிசு: ந. நடராசா, தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை.

---


# தேசீய சேமிப்பு வாரம்

## நவம்பர் 11௳ முதல் 18௳ வரை

தேசிய சேமிப்பு வாரத்தின்போது உங்களுக்கு மீதப்படும் மிச்சப்பணத்தை இலங்கை அரசாங்கக் கடன்கள், இலங்கைச் சேமிப்புப் பத்திரங்கள் ஆகியவைகளில் முதலீடு செய்து, நீங்கள் உங்களையும், யுத்தமுயற்சியையும், உங்கள் தேசத்தையும் உதவி செய்யுங்கள்.

**இலங்கை இலட்சிய தொகை**
**ரூ. 25,000,000**
(சேமிப்புப் பத்திரங்கள் இலங்கை அரசாங்கக் கடன்கள் மூலமாக)

**சேமிப்புப்பத்திரங்கள் இலட்சியதொகை**
**ரூ. 3,000,000**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம் | ரூ. 25,000 |
| யாழ்ப்பாணப்பெரும்பகுதி (District) | ரூ. 35,000 |
| பருத்தித்துறை | ரூ. 40,000 |
| மானிப்பாய் | ரூ. 25,000 |

சேமிப்புப் பத்திரங்கள், எல்லாத் தபாற்கந்தோர்களிலும், கச்சேரிகளிலும், வங்கிகளிலும், பெரும்பகுதிக் காரியாதிகாரிகளின் கந்தோர்களிலும், பிரதம தலைமை யதிகாரிகளாலும் விற்கப்படுகிறது. இவற்றை ஓர் கிளைத் தபாற்கந்தோர், அநுமதிபெற்ற உதவியாளர்கள், கிராமவிதானைகள் மூலமாகவும் வாங்கலாம்.

அனுமதிபெற்ற உதவியாளரிடமும், கிராம விதானையிடமும் செலுத்தப்படும் பணத்திற்குத் தயவுசெய்து ரசீது பெறுதக் கொள்வதுடன், P. O. S. C. 1. அல்லது P. O. S. C. 2. (மைனர்) விண்ணப்ப பாரத்தை நீங்கள் பூர்த்தி செய்து கையொப்பமிட்டிருக்கிறீர்களா என்பதையும் கவனித்துக் கொள்ளுங்கள்.

அனுமதி பெற்ற உதவியாளர், கிராமவிதானை ஒவ்வொருவரும், அவரவருடைய பெயர்பொறிக்கப்பட்டு டிஸ்திரிக் அல்லது பட்டின சேமிப்பு நிர்வாகசபைத் தலைவரால் ஒப்பமிட்டு வழங்கப்பட்ட சின்னங்களை (Badges) அணிந்திருப்பர்.

**உங்கள் பகுதியின் இலட்சியத் தொகையைப்பெற உதவி புரியுங்கள்.**

கொம்மிஷனர்,
யுத்த சேமிப்பு இயக்கம்.
டைம்ஸ் கட்டிடம், கொழும்பு,

G. 79, 26-10, 2 & 9-11-44



## தெல்லிப்பளை ஐக்கிய பண்டசாலை

அனுபவமுள்ள விற்பனவுகாரன் உடனே தேவை, சம்பளம் ரூபா 30 மாதவீதம். காசுப்பிணை ரூபா 200. இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் மனுப்பத்திரத்தை 1944ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ந் திகதிக்கு முன் அனுப்பவும்.

பொ. அம்பலவாணர்,
தலைவர்,
23-10-44.
Mis 142 26-10 44


## மஹோவில் துணிகரத் திருட்டு

மஹோவாசியான மிஸ்டர், எஸ். டி. ஸொய்ஸா என்பவருடைய வீட்டில் சனிக்கிழமை இரவு திருடன் புகுந்து 10000 ரூபா பெறுமதியான ரொக்கத்தையும் மற்றும் சாமான்களையும் திருடிக்கொண்டு போய்விட்டதாக அறியப்படுகின்றது.


## மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

### டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் ரக்ஷா"

அகாலப் பிரசவத்தை முற்றாகத் தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்ட தைலம்.

டாக்டர். எஸ். சி. பாலின "சாந்தன் ரக்ஷா" கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிதாபகரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றை தடுத்து மற்றும் நாட்சென்ற கர்ப்ப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் கசிவைக் கட்டுப்படுத்தி, நச்சுக்குடலிலிருந்து இரத்தக்கறையையும் பல சிக்கல்களையும் கர்ப்பப் பையில் புகுந்து அதனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டு பண்ண விடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படி தைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம். மாதரின் கர்ப்பகாலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும். நூற்றுக் கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள் பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டர் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர். எஸ். சி. பால அண்டு சன்ஸ், கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:
கொன்சிஸ்ரறி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.
யாழ்ப்பாணத்தில்: ஓரியண்டல் இம்போட்கம்பனி
28, நம்பர் சாய்ப்புத் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

H. 131 12-10-44—


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 26, October, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org